**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு 132 /2015**
**connected with**
**அசல் வழக்கு 169/2019**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15–ம் நாள் வெள்ளிக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 15.12.2023 | தந்தை/கணவர் பெயர்: | தங்கராசு |
| பெயர்: | ராமலிங்கம் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | மாங்கனாம்பட்டு | சமயம்: | |
| சாதி: | | வயது : | 54/2023 |
| தொழில்: | | | |

**<u>கூடுதல் முதல் விசாரணை வாக்குமூலம்: 15.12.2023.</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். அசல் வழக்கு எண் 169/2019–ல் 1–ம் பிரதிவாதி ஆவேன். இடைமனு எண் 2/2021, நாள் 09.03.2022 –ம் தேதிய உத்தரவுப்படி மேற்படி இரண்டு வழக்குகளையும் இணைந்து விசாரிக்க உத்தரவிட்டதன் அடிப்படையில் இன்று கூடுதல் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்படுகிறது. கூடுதல் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். கூடுதல் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

07.10.1998–தேதியிட்ட தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எனது தகப்பனார் பெயரில் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீதின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (பிரதிவாதி

தரப்பில் அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லையென ஆட்சேபணை செய்யப்பட்டு, ஆட்சேபணை பேரில் குறியீடு செய்யப்படுகிறது). எனது தகப்பனார் இறப்பிற்கு பிறகு தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எனது பெயரில் ஏற்பட்ட வீட்டு வரி ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4– வரிசை (எண்ணிக்கை – 3) ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பிற்கு எனது பெயரில் மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5– வரிகை (எண்ணிக்கை – 3) ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் முறையே **நீ.ம.சா.1 மற்றும் நீ.ம.சா.2 ஆகவும்**, நில அளவையரின் அறிக்கை மற்றும் வரைபடம் முறையே **நீ.ம.சா.3 மற்றும் நீ.ம.சா. 4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கு எண் 132/2015 தாவாப்படி தீர்ப்பாணை பிறப்பித்தும், அசல் வழக்கு எண் 169/2019 ஐ செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.